**விருத்தாசலம் நகராட்சி**

**கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு**

2019 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு விருத்தாசலம் நகராட்சியின் மன்றக்கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) திரு. சி. பாண்டு அவர்கள் தலைமையில் மன்ற கூட்டத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகளின் எடு குறிப்பு.

**பொருள் எண். 1.**

அரசாணை எண் (MS) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள். 19.11.2019ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள். 20.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 26.07.2018 ன்படி 01.04.2018ஆம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rates) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017ஆம் தேதி முதல் சொத்துவரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3628 நாள். 21.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**